சக்தி பௌண்டேஷன்- சக்தி மருத்துவப் பகுதி

குழந்தைகள் பகுதி - காய்ச்சல் மற்றும் சளி

““ நோயின் தன்மை அறிந்து, அதற்கான மூல காரணத்தையும் அறிந்து அதன்படி தரும் சிகிச்சையே பலன் தரும்””

* திருக்குறள் கருத்து

---

இங்கே கூறப்படும் மருத்துவ சிகிச்சைகளைக் கூடியமட்டும் குழந்தைகளுக்குப் பிறப்பு முதலே அறிமுகப்படுத்தவும்.அதனால் அவர்தம் உடல் சிகிச்சையை விரைவில் ஏற்கும்.வயது கூட கூட சிகிச்சையை ஏற்க சற்றுத் தாமதம் ஆகும்.இங்குள்ள மருந்துகள் அனைத்தும் இயற்கையாகவே வீட்டில் அன்றாடம் நாம் பயன் படுத்துபவை தான்.பயம் இல்லாமல் இவற்றைக் குழந்தைகளுக்குத் தரலாம்.

**நூற்றிஒன்று முதல் நூற்றியிரண்டு ஃபேரன் ஹீட் அளவு காய்ச்சல் இருக்கும் போது என்ன செய்யலாம்?**

சிறிது ***மிளகு, மஞ்சள், இஞ்சி, தனியா மற்றும் பட்டையைப் பாலுடன்*** சேர்த்து நன்கு கொதிக்க வைக்கவும்.சிறிது தேனும் சேர்த்துக் கொள்ளலாம். வயதுக்கு ஏற்ப நாளுக்கு மூன்று அல்லது நான்கு வேளை தரவும், காய்ச்சல் குறையும்.மீறிக் குறையவில்லை என்றால் உடனடியாக மருத்துவரை அனுகவும்.

**முக்கிய குறிப்பு:** காய்ச்சல் நூறு டிகிரிக்குக் கீழ் இருப்பது கவனத்தில் இருக்க வேண்டும்.

மஞ்சளைத் தேனுடன் கூட்டிக் குழந்தைகளுக்குத் தருவதாலும் காய்ச்சல் விலகும்.இவற்றுடன் அல்லோபதி மருந்தும் தரலாம்.

**கற்பூரவல்லித் தழையின் மகத்துவம்:**
கற்பூரவல்லித் தழைகளின் சாற்றைப் பிழிந்து சொட்டுக்களாய்க் குழந்தைகளுக்குத் தருவதாலும், டிகஷனாய்க் காய்ச்சித் தருவதாலும் சளி, காய்ச்சல், வைரஸ் - பாக்டீரியா தாக்கம், அஜீரணம், இரும்மல், மூட்டுவலி, பல்வலி மற்றும் ஆஸ்மா தொல்லைகள் விலகும்.

தோல் வியாதிகள், பொடுகுத் தொல்லை மற்றும் அலர்ஜிகளுக்கும் இத்தழைகளின் சாறு அருமருந்தாகும்.

**சின்ன வெங்காயத்தின் பெரிய மருத்துவ குணம்:**
பயங்கர சளிக்கு, சின்ன வெங்காயத்தை நசுக்கிச் சிறிது தேனுடன் கலந்து சாப்பிட உடனே சளி பழுக்கும், வெளியேறும். பனங்கருப்படி சேர்த்தும் மெல்லலாம்.

***சுக்கை*** தினம் மூன்று வேளை மென்று விழுங்க வரட்டு இரும்மல் கட்டுப்படும்.

***நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யைக்*** கொப்பளிக்க வரட்டு இரும்மல் கட்டுப்படும்.

***சின்னவெங்காயத்தின்*** சாற்றை வாயில் வைத்துக் கொண்டு, மெதுவாக அதன் சாற்றைத் தொண்டைக்குள் இறக்கி விழுங்க சளியும் கோழையும் பழுத்து வெளியேறும்.

***ஆடுதொடா இலைகளைப்*** பச்சையாக அரைத்தோ காய்ந்தபின் டிகஷனாகக் காய்ச்சிக் குடித்தால் உடனடியாக சளியும் அதன் கோழையும் பழுத்து வெளியேறும்.

**காளி சிகிச்சை:**
காளி தேவி போல் நாக்கை முடிந்த மட்டும் வெளியே நீட்டி சில நிமிடங்கள் வைத்து மீண்டும் உள் இழுத்துக் கொள்க.இவ்வாறு தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் செய்து வர தொண்டையில் ஏற்பட்ட வலியும் இன்ஃஃபெஷனும் விலகும்.

மேற்கண்ட சிகிச்சைகள் மூலம் பயன்பெற வாழ்த்துகள்!

நன்றி!